ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,127 வைகாசி மாதம்

# இருக்குவேதம் தரும் இந்துவின் பத்து கடமைகள்



இந்துவேத இந்துமதத் தலைமை ஆச்சாரிய குருபீடக் குருதேவர்,
பதினெண்சித்தர் மடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

43,73,127ஆம் ஆண்டின் வைகாசி மாத வெளியீடு.

*தலைப்பு*:- **"இருக்குவேதம் தரும் இந்துவின் பத்து கடமைகள்"**

# உள்ளுறை

1. **"இந்துமதத்தைப் பாதுகாக்க, இந்துக்களைப் பாதுகாக்க உழைக்க அழைக்கிறார் ஞானாச்சாரியார்!"** - கன்னியாகுமரி மாவட்டத்து திருவருட்செல்வர் ஒருவருக்கு குருதேவரின் தலைமைப்பீடத்திலிருந்து விடுக்கப்பட்ட அஞ்சல்.
2. **"இந்துவேதம் பரப்பி இந்துக்களைப் பாதுகாக்கப் புறப்பட்டிருக்கிறார் ஞானாச்சாரியார்"** - கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த மற்றொரு திருவருட்செல்வருக்கு பதினெண்சித்தர் திருச்சபை அறக்கட்டளையிலிருந்து விடுக்கப்பட்ட அஞ்சல்.
3. **"இந்துக்களை இந்துக்களாக்கும் முயற்சியே நமது பணி"** - கரூரில் வாழ்ந்த சித்தரடியானுக்கு குருதேவர் விடுத்த சுற்றுப்பயணத் திட்ட விளக்க அஞ்சல்.
4. **"இருக்குவேதம் தரும் இந்துவின் பத்து கடமைகள்"** - காரைக்குடியைச் சேர்ந்த புதிய அறிமுகத்தார் ஒருவருக்கு தலைமைப்பீடத்திலிருந்து விடுக்கப்பட்ட அஞ்சல்.
5. **"இந்துக்களுக்கு ஒரு வேண்டுகோள்"** - அனைத்து இந்துக்களுக்கும் குருதேவர் வழங்கும் வேண்டுகோள் அறிவுரை.

# இந்துமதத்தைப் பாதுகாக்க, இந்துக்களைப் பாதுகாக்க உழைக்க அழைக்கிறார் ஞானச்சாரியார்!

23-3-1995.

அனுப்புநர்:
சித்தர் சட்டநாதர்,
பதினெண்சித்தர் மடம் அலுவலகம்,
3, N.G.O.நகர்,
பொன்னேரி - 601204.

பெறுநர்:
திருவருட்செல்வர் T. நாகமணி,
சேரமங்கலம்,
மணவாளக் குறிச்சி அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629252.

(1) திருவருட்செல்வ! நாகமணி அவர்களே! தங்களது கடிதம் பார்த்தேன். தங்களது குலதெய்வத்தை நேரில் பார்க்கிறேன். இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் அருளை விருந்தாக மருந்தாக வழங்கத் தங்களைத் தேர்ந்தெடுத்துள்ளார். அந்த புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். இந்து மத வரலாறுகளை ஆதிசிவனாரின் இந்துவேத அறப்படி சொல்வோம். காயந்திரி செவிக்க, உருவேற்றிட, ஓதிட, வேத கோசமிட நீங்கள்தான் கற்றுக் கொடுக்க வேண்டும். உங்களையும் ஓர் ஆச்சாரியாராக மாற்றி நீங்களே இந்துக்களுக்கு தீட்சை அளிக்கலாம். பூணூல், ஒற்றை உருத்திராக்கம் வழங்கலாம்.

ஞானுச்சாரியார் உங்களை ஆச்சாரியாராக்க விரும்புகிறார். அதன்மூலம், நீங்களும் அருளுலக செல்வங்களையும், அநுபவங்களையும் பெறலாம், நலமடையலாம்; வந்துள்ள, வரப்போகிற பாதிப்புகளைத் தடுத்துக் கொள்ளலாம்; மற்ற மக்களுடைய பாதிப்புகளை எல்லாம் அகற்றித் தரலாம். நீங்கள் பரிந்துரை செய்பவர்களையெல்லாம் ஞான வள்ளல், ஞான வேந்தர், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்கள் ஆச்சாரியாராக மாற்றித் தருவார். அதன் மூலம் எல்லா மக்களும் மெய்யான இந்துக்களாக மாறுவார்கள். மாற்று மத மந்திரவாதிகளால் வரக்கூடிய ஆபத்துகள் நீங்கும். அப்பாவியான ஏழை இந்துக்கள் மாற்று மதங்களுக்கு மாறுவது தடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல் மாற்று மதங்களுக்கு மாறியவர்களை திரும்ப இந்துக்களாக மாற்ற முடியும். இப்படிச் செய்தால் இந்துமதம் பிழைக்கும்; இந்துக்களின் வாழ்வு தழைக்கும். எனவே, உங்களை இந்துமதத்தைப் பாதுகாக்க, இந்துக்களைப் பாதுகாக்க, உழைக்க அழைக்கிறார் அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார்.

(2) கன்னியாகுமரி மாவட்டம் முழுவதிலுமுள்ள இந்துக் கோயில்கள் அனைத்தையும் உங்களைப் போன்றவர்களின் மூலம் ஓமம், யாகம், யக்ஞம் ஆகிய மூன்றும் செய்து புத்துயிர்ப்பு செய்து தர பதினெண்சித்தர் மடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் தயாராக இருக்கிறார். அவருக்கு நீங்கள்தான் சாதனமாக, கருவியாக இருக்க வேண்டும்.

(3) இப்பணிகளை இந்த நூற்றாண்டில் இந்துமதத்தின் பெயரால் உள்ள எந்த ஒரு கட்சியோ, அல்லது தலைவரோ, அல்லது சாமியாரோ, மடாதிபதியோ, ஆதீனமோ இதுபோல் செய்திட முன்வரவில்லை.

(4) பதினெண்சித்தர் மடத்தில் ஆயிரக்கணக்கான சித்தர்கள் இருக்கிறார்கள். பதினெண்சித்தர் மடத்து ஆச்சாரியார்கள் நாடு

முழுதும் பரவலாக நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். இந்த நூற்றுவர்கள் பல்லாயிரக் கணக்கானவர்களாக மாற வேண்டிய அவசியம் வந்துவிட்டது. அதாவது, இந்துக்களே ஒன்று திரளுங்கள் என்று கூக்குரல் போடுவதாலோ, இந்துக்களின் ஆட்சியை அமைப்போம் என்று கூக்குரல் போடுவதாலோ, மாற்று மதத்தவரை கண்மூடித்தனமாக பொதுமேடைகளில் திட்டுவதாலோ எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டு விடாது. இந்தப் பேருண்மையை இந்தியா விடுதலை பெற்று அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாகியும் கூட பல்வேறு இந்துமதக் கட்சிகளால், இந்துமதத் தலைவர்களால் இந்துக்களை ஒன்றுதிரட்ட முடியவில்லை; இந்துக்களை ஒற்றுமைப் படுத்த முடியவில்லை; இந்துக்கள் மதம் மாறுவதைத் தடுக்க முடியவில்லை. மாற்று மத மந்திரவாதிகளால் பாதிக்கப்பட்டு துன்பப்படுகின்ற இந்துக்களை நலப்படுத்த முடியவில்லை. இந்துக்களில் கணிசமானவர்கள் வெளிப்படையாகவே மாற்று மதக் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வதையும், காணிக்கை செலுத்துவதையும், மாற்று மதத்தவரிடம் மந்திரித்துக் கொண்டு தாயத்து, முடிகயிறு, சக்கரங்கள் வாங்குவதையும் தடுக்க முடியவில்லை, தடுக்க முடியவில்லை, தடுக்க முடியவில்லை, தடுக்க முடியவே இல்லை. இதுதான் உண்மை, இதுதான் உண்மை, இதுதான் உண்மை. இன்றைக்கு இந்தியாவில் இந்துமதத்தின் பெயரில் உள்ள எந்த ஒரு அரசியல் கட்சியாவது அல்லது எந்த ஒரு இந்து சமயக் கட்சியாவது அல்லது எந்த ஒரு இந்துமதத் தலைவராவது இந்த உண்மையை மறுக்க முடியுமா? மறுக்க முடியுமா? மறுக்க முடியுமா?

(5) ஆனால், ஆனால், ஆனால், இவற்றை எல்லாம் சரி செய்யப் புறப்பட்டிருக்கும் ஞானாச்சாரியாரை இந்துமத அரசியல் கட்சிகளும், சமுதாயக் கட்சிகளும், சமயக் கட்சிகளும், மதத் தலைவர்களும் எதிர்க்கிறார்களே! எதிர்க்கிறார்களே! எதிர்க்கிறார்களே! ஏன்? ஏன்? ஏன்? என்று சிந்தித்தீர்களா?

மாற்று மதங்களுக்கு சவால் விட வேண்டிய B.J.P., V.H.P., R.S.S., இந்து முன்னணி ஆகியவற்றைச் சார்ந்தவர்கள் இந்துக்களையும், இந்துக் கோயில்களையும் காப்பாற்றப் புறப்பட்டிருக்கும் பதினெண்சித்தர் மடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியாருக்கு சவால் விடுவது ஏன்? சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள்; சந்தியுங்கள், சந்தியுங்கள், சந்தியுங்கள் பதினெண்சித்தர் மடத்துச் சித்தர்களை, ஆச்சாரியார்களை, குருமகாசன்னிதானம் அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியார் அவர்களை.

(6) இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்துக்களுக்குள்ளேயே சண்டைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்? என்றைக்கு இந்துக்கள் சமாதானத்தையும் ஒற்றுமையையும் பெற்று ஒன்றுதிரண்டு இந்துமத ஆட்சியை உருவாக்குவது?

(7) இந்துக்களுக்கு இந்துமதம் என்றால் என்ன என்று தெரியவில்லை. இந்து எப்படி வாழ வேண்டும்? எப்படிப் பூசை செய்ய வேண்டும்? இந்துக் கோயில்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்? இந்துவேதத்தில் என்னென்ன தெரிந்து கொள்ள வேண்டும்? ஒவ்வோர் இந்துவும் கட்டாயமாக மாதாமாதம் அமாவாசை அல்லது பௌர்ணமிகளில் காப்புக் கயிறு அல்லது கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும், பூணூல் அணிந்து கொள்ள வேண்டும், ஒற்றை உருத்திராக்கம் அணிந்து கொள்ள வேண்டும், மாதாமாதம் அணிய முடியாதவர்கள் தீபாவளியிலும், பொங்கல் திருநாளிலும், ...... பூணூல், காப்புக்கயிறு, ஒற்றை உருத்திராக்கம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற பேருண்மை தெரிந்திருக்க வேண்டும்.

(8) இன்றைக்கு எத்தனை கோயில்களில் பூணூல், காப்புக் கயிறு, ஒற்றை உருத்திராக்கம் தருகிறார்கள்? அல்லது தர முடியும்? அல்லது எந்தெந்த அரசியல் கட்சிகள், எந்தெந்த இந்துமதக் கட்சிகள், எந்தெந்த இந்து சமுதாயக் கட்சிகள், எந்தெந்த மடாதிபதிகள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், ஆச்சாரியார்கள் சாதி வேறுபாடின்றி

எல்லோருக்கும் பூணூல் அணிவிக்க, காப்புக் கயிறு கட்டிவிட, ஒற்றை உருத்திராக்கம் அணிவிக்க தயாராக இருக்கிறுர்கள்? தயாராக இருக்கிறுர்கள்? தயாராக இருக்கிறுர்கள்?

இதற்குரிய விடையில்தான் இந்துமதத்தின் போலிகள், காலிகள், மாற்று மதத்தவர்களின் கூலிகள், மதத் துரோகிகள், மத விரோதிகள் முதலியவர்கள் பற்றிய விளக்கம் கிடைக்கிறது.

(9) பொதுமக்களுக்கு இந்து வேதத்தைக் கூற, இந்துமதத்தை நடைமுறைப்படுத்தி விளக்கிட, செயல்நிலைகளை விளக்கிட, மக்களுக்கு தீட்சை தந்து பூநூல் அணிவிக்க, ஒற்றை உருத்திராக்கம் அணிவிக்க, காப்புக் கயிறுகள் வழங்கிட, பூசைக்கு சக்கரங்கள் வழங்கிட, கோயில்கள் புத்துயிர்ப்பு செய்து தந்திட தயாராக இருக்கின்ற பதினெண்சித்தர் மடத்தை, குருபீடத்தை, இந்துவேத நாயகத்தை, இந்துமதத் தந்தையை, இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடக் குருதேவரை ... ஏற்றிட மக்கள் தயங்கவும், மயங்கவும் செய்யும் கட்சிகளை, தலைவர்களை, அப்பாவித் தொண்டர்களைத் திருத்துவதற்கு நீங்கள்தான் முன்வர வேண்டும். அதற்கு நீங்கள் எல்லாம் ஆச்சாரியாராக முன்வர வேண்டும்.

(10) அதாவது, அதாவது, அதாவது கன்னியாகுமரி கடற்கரையில் சிலையாக நிற்கும் விவேகானந்தரின் கனவுகள் நனவாக வேண்டுமென்றுல் கங்கைக் கரையில் சாம்பலாக இருக்கின்ற இராமகிருட்டிணரின் கொள்கைகளும், குறிக்கோள்களும் நிறைவேற வேண்டுமென்றுல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள உங்களால்தான் நேரடியாக, ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்ய முடியும். அதற்காக அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியாரை விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயஞக பயன்படுத்திட வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

<u>குறிப்பு 1</u>:- கன்னியாகுமரி மாவட்டத்தில் 64 ஆண்டுகளாக இருந்து வரும் ஐந்தவா இந்து சேவா சங்கத்தின் பெயரிலேயே கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் இந்துக்களை இந்துக்களாக்கிட, இந்துக்களை ஒற்றுமை பெற்று ஒன்றுதிரட்டிட செய்யும் வல்லமை ஐந்தவா சங்கத்திற்கு உண்டு என்று கூறி ஐந்தவா சங்கத்தோடு இரண்டறக் கலந்து செயல்படத் தயாராக இருங்கள். பதினெண்சித்தர் மடத்தை கன்னியாகுமரி மாவட்ட மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் விவேகானந்தர் நினைவுச் சின்னம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பதற்குரிய பெருமை கிடைக்கும். இதற்கு மேல் கூறத் தேவை இல்லை. தங்களுடைய ஒத்துழைப்பினை பதினெண்சித்தர் மடாதிபதி எதிர்பார்க்கிறார் என்பதை உங்களிடையே செயல்பட்டு வரும் சித்தர் சட்டநாதர் அறிவிக்கிறேன்.

<u>குறிப்பு 2</u>:- பல்வேறு வகையான உலகியல் காரணங்களாலும், அருளுலகக் காரணங்களாலும், பாதுகாப்பு முன்னெச்சரிக்கைக் காரணங்களாலும் குருபீடம் அவர்கள் அருள்மிகு மண்டைக்காட்டு பகவதி அம்மன் திருவிழாவில் இரண்டாவது நாள் பேச முடியாமல் போனதை யாரும் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று உங்களுக்கும் உங்கள் மூலம் மற்றவர்க்கும் தெரிவிக்குமாறு குருமகா சன்னிதானம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். இதை மீண்டும் உங்களிடையில் தொண்டாற்றும் சித்தர் சட்டநாதராகிய யாம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**அன்புடன்**

**சித்தர் சட்டநாதர்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல் கையெழுத்துப் பிறதியாக கிடைத்தது.//**

# இந்துவேதம் பரப்பி இந்துக்களைப் பாதுகாக்கப் புறப்பட்டிருக்கிறார் ஞானாச்சாரியார்

{பதினெண்சித்தர் திருச்சபை அறக்கட்டளை லெட்டர் பேடில் எழுதப்பட்ட அஞ்சல்}

*"தன்னையறிந்தால் தலைவனை அறியலாம்*
*தலைவனை அறிந்தால் தன்னை அறியலாம்."*

- சித்தர் நெறி

<u>பதிவு அலுவலகம்:</u>
13, குமாரசாமி தெரு, வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை - 600053.

<u>நிர்வாக அறங்காவலர்:</u>
ஞானாச்சாரியார்,
சித்தர் கருவூரார்.

நாள்: 4-4-95,
பொன்னேரி.

<u>பெறுநர்</u>: திருவருட்செல்வர் விஷ்ணுதாசன் அவர்கள், மேலத்தெரு, குளச்சல் - 629251.

<u>தொடர்பு</u>: அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் மண்டைக்காடு இந்து சமய மாநாட்டிற்காக குளச்சலில் எழுந்தருளியபோது தாங்களும், தங்களது குடும்பத்தார்களும் குவலய குருபீடத்தோடு எழுந்தருளிய சித்தர்களின் திருக்கூட்டத்திற்கு அறுசுவை உண்டி அமுதென அளித்து போற்றிப் பேணியமை தொடர்பாக விடுக்கப்படும் திருவோலை.

திருவருட்செல்வர் விஷ்ணு அவர்களே!

(1) பதினெண்சித்தர் மடத்து அறக்கட்டளை அலுவலகப் பொறுப்பாளராகவும், இ.ம.இ., இ.மு.க. இணை பொதுச் செயலாளராகவும், குருமகாசன்னிதானத்தின் அணுக்கத் தொண்டனாகவும் வாழ்ந்து வரும் சித்தர் அம்பலக் கூத்தர் இரா.சீனிவாசன் B.B.A., (B.L.) விடுத்துக் கொள்ளும் குருவுள ஒப்புதல் பெற்ற திருவோலை.

(2) திருவருட்செல்வர் அவர்களே! நான் தங்களுக்கு குளச்சலில் இருந்து சென்னை திரும்பிய உடனேயே ஞாலகுருவின் ஆணைப்படி நன்றி அறிவிப்பு மடல் எழுதினேன். ஆனால், இன்று 4.4.95 முடிய தங்களிடமிருந்து எந்தவிதமான பதிலும் இல்லை. அதாவது சுமார் 2 வாரங்களுக்கு மேலாகியும் தங்களிடமிருந்தும் பதில் வரவில்லை. தங்களைப் போலவே திருவருட்செல்வர் நடராசன், அசோகன், இராதாகிருட்டிணன், தங்கசாமி, ராசா, சனார்தனன், .... முதலியோர்களுக்கு விடுக்கப்பட்ட அஞ்சல்களுக்கும் இன்று வரை பதில் வரவில்லை.

(3) இது பற்றி ஞானவேந்தர், பரபிறம்மம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் தொடர்பாக இத்திருவோலை வரையப் படுகிறது. தாங்கள் பதினெண்சித்தர் மடாதிபதியின் திருக்கூட்டத்தார் அனைவருக்குமே ஆழ்ந்த பத்தியோடும், அளப்பரிய ஆர்வத்தோடும் மிகப்பெரிய விருந்துகள் வைத்த விவரங்கள் முழுமையாக மடாதிபதி அவர்கள் சென்னை திரும்பிய பிறகுதான் தெரிந்து கொள்ள நேரிட்டது. குருபீடம் மிக மகிழ்ந்து உங்களைப் பலமுறை பாராட்டியது.

(4) குருபீடம் தமக்கு குளச்சலில் இருக்கும் போதே தங்களது விருந்துகள் பற்றி தெரிவிக்கப்பட்டிருந்தால்; தங்களுடைய முயற்சிகளுக்கு மிகப் பெரிய அளவில் பயன் ஏற்படும் வண்ணம் குருபீடமே

தங்கள் வீட்டிற்கு எழுந்தருளி ஒரு வேளையாவது தங்களுடைய விருந்தை அருளுலகத்தவர்களுக்கு படையலாக்கி பூசை செய்திருக்க இயன்றிருக்கும். எனவே, மீண்டும் அனாதியாதி கடந்த தம்பிரான் அடிகளார், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எழுந்தருளினால், கட்டாயமாக தங்களுடைய இல்லத்தில் யாகம் செய்து; தங்களுக்கு எல்லா வகையான அருட்பயன்களையும், பாதுகாப்புக்களையும் விளைவித்தருள்வார்.

(5) இக்காலத்தில் தேவார, திருவாசக காலங்களில் வாழ்ந்திட்ட சிவநேசச் செல்வர்களைப் போல்; சிவநெறி பரப்பும் சித்தர்களுக்கு பணிவிடை செய்த தங்களை ஆதிசிவனார் தோற்றுவித்த பதினெண்சித்தர் மடத்தின் அருட்பணிகளில் பங்குபெற்று அருட்பேரின்பம் துய்க்குமாறு செய்தல் வேண்டும் என்று மடாதிபதி திருவுளம் கொண்டுள்ளார்.

(6) இதன் காரணமாகத்தான், தங்களிடமிருந்து பதில் அஞ்சல் ஏதேனும் வந்ததா? என்று அடிக்கடி வினவினார் ஞானாச்சாரியார்.

(7) நானோ, "தங்களிடமிருந்து மட்டுமல்லாமல், குளச்சல் வட்டாரத்திலிருந்து வேறு யாரிடமிருந்துமே அஞ்சல் வரவில்லை" என்ற பதிலையே கூறி வந்தேன். எனவேதான், ஆதிசிவனாரின் குருபாரம்பரிய வாரிசாக வாழுகின்ற கருகுல ஆதீனம், கருமூலப் பண்டாரம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்; தங்களுக்கு இத்திருவோலையை எழுதுமாறு பணித்தார். அன்பு கூர்ந்து எல்லோரையும் போல்; தாங்களும் பதில் எழுதாமல் அமைதியாக மௌனம் காத்திட வேண்டாம். அங்குள்ள உண்மை நிலைகளை வெளிப்படையாக ஒளிவு மறைவின்றி எழுதிடுங்கள்.

(8) சில ஆயிரம் ஆண்டுகளாக, இந்த உலக மக்களை '<u>சமத்துவ சகோதர தத்துவ, சமாதான சகவாழ்வு வாழ்ந்து; மனித நேயம் பேணி, மனித அன்பையும், பண்பையும், பற்றையும், பாசத்தையும்,</u>

<u>சத்தியத்தையும், நீதியையும், நேர்மையையும் கட்டிக்காத்து நிம்மதியும், அமைதியும் உடைய நல்வாழ்வு வாழுமாறு செய்ய வேண்டும்</u>' -- என்பதற்காகவே அருளிய **<u>இந்துவேதம் இருந்த இடம் தெரியாமல் ஆக்கப்பட்டு விட்டது</u>**. அதனுல், இந்துக்கள் மாற்று வேதத்தவர்களுக்கும், வேற்று மதத்தவர்களுக்கும் வேட்டைப் பொருளாகி; சிதைந்து, சீரழிய நேரிட்டு விட்டது.

(9) இவையனைத்தையும் செப்பனிடுவதற்காகவே; சீர்படுத்தி இந்துக்களைப் பாதுகாப்பதற்காகவே; ஆதிசிவனுரின் குருபாரம்பரிய வாரிசாகத் தோன்றியுள்ள குருமகா சன்னிதானம், ஞாலகுரு, சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் பதினெண்சித்தர் மடத்தின் குவலய குருபீடம் ஏறி அருளாட்சிப் பணிகளைத் துவக்கியுள்ளார். இதற்காக, இந்துவேத ஏட்டறிவையும், பட்டறிவையும், பாரம்பரிய அருளாற்றலையும் அரை நூற்றுண்டு காலமாக சித்தர்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், சன்னிதானங்கள், தம்பிரான்கள், ஆதீனங்கள், .... ஆச்சாரியார்கள் முதலிய நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களை உருவாக்கிட்டார். இவர்களின் மூலம், இந்துக்களின் அக வாழ்விலும், புற வாழ்விலும் ஏற்பட்டுள்ள நாள், கோள், மீன், இராசி, காற்று, கருப்பு, கண்ணேறு, .... முதலியவற்றுல் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கும், மந்திரவாதிகளின் எல்லாவகையான தாக்குதல்களால் ஏற்பட்டுள்ள தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும் உடனடியாக தடை கட்டி, நிறுத்தி, அனைத்துக்கும் முடிவு கட்டி; விடிவை அளிக்கும் பணியை நெறிமுறைகளோடு நேரடியாக துவக்கிட்டார்.

(10) இவற்றையெல்லாம் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டு எச்சரிக்கை அடைந்திட்ட இந்துக்கள் அல்லாதவர்களும், இந்துக்களில் போலியானவர்களும், இந்துக்களில் அன்னியர்களின் கூலியானவர்களும், குருபீடத்தின் அருட்பணிகளுக்கு மிகப் பெரிய தடையாகச் செயல்பட்டு வருகிறுர்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக, ஏற்கனவே, இந்துமதத்தின்

பெயராலுள்ள அரசியல் கட்சிகளும், சமயக் கட்சிகளும், சமுதாயக் கட்சிகளும், சேவா சங்கங்களும், பசனே மன்றங்களும், அறநெறி வளர்க்கும் தனிப்பட்ட பெரியோர்களும்; அருட்கொடை வள்ளலான அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாரை, இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடத்தை, இந்துவேதம் பரப்பி இந்துக்களைப் பாதுகாக்கப் புறப்பட்டிருக்கும் பரபிறம்மத்தை...... சரியாகப் புரிந்து கொள்ளாமல்; தவறுகப் புரிந்து கொண்டு தங்களுக்குப் போட்டியாக வந்திருப்பவராக எண்ணிக் கொண்டு பதினெண்சித்தர் மடாதிபதியின் முயற்சிகளுக்கு தடைக்கற்களாக மாறியுள்ளார்கள். இதை அவர்களுக்கு புரிய வைப்பதற்காகத்தான், தங்களைப் போன்றோர்களுக்கு இதுபோல் நெடிய அஞ்சல் எழுதி; திருமடத்தின் முயற்சிகளை எல்லோருக்கும் புரிய வைக்க முயலுகிறது குவலய குருபீடம்.

(11) எனவே, அன்பு கூர்ந்து இந்த அஞ்சலை நமது நண்பர்கள் அனைவரிடமும் படித்துக் காட்டுங்கள். நம்மவர்களுக்கு பதினெண்சித்தர் மடத்தோடு தொடர்பு கொள்ளக் கூடாது என்று என்னென்ன தடைகள், சிக்கல்கள், தயக்கங்கள், மயக்கங்கள், குழப்பங்கள், குறுக்கீடுகள், நிர்ப்பந்தங்கள், .... ஏற்பட்டிருக்கின்றன? என்பதை நீங்களாவது எழுதுங்கள்.

உங்கள் பதிலை, மிக விரைவில் எதிர்பார்க்கும், இந்துமத பாதுகாப்புப் பணி தொண்டன்,

**சித்தர் அம்பலக்கூத்தர் இரா. சீனிவாசன்.**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**//உண்மை நகல்//**
**//மூலம்: கையெழுத்துப் பிறதி நகல்.//**

# இந்துக்களே இந்துக்களாக்கும் முயற்சியே நமது பணி!

கட்டுரை அஞ்சல் எண்: 2 / 16-4-95

பொன்னேரி,
16-4-1995.

விடுநர்:
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை அலுவலகம்,
3, N.G.O.நகர், ‘தென்றல்’ இல்லம்,
பொன்னேரி, சென்னை - 601204.

பெறுநர்:
சித்தர் நாவல்மரத்தடியார்,
உயர்திரு அ. செயபாலகிருட்டிணன் B.E.,
D-14, R.M. காலனி, புலியூர் C.F. (P.O.),
கரூர் - 639114.

அன்பு மகன் சித்தர் நாவல்மரத்தடியார் அ. செயபாலகிருட்டிணன் B.E.க்கு,

(1) யாவும் நலமாகட்டும்! வெற்றியாகட்டும்! அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் திருவருளே!

(2) அன்பு மகனே! பொது வாழ்க்கையில் ஈடுபடக் கூடிய எவருக்குமே குடும்பத்தின் ஒத்துழைப்பு, துணை, ஆதரவு, ... முதலியனவற்றில் எதுவுமே கிடைத்ததாக வரலாறு இல்லை. இதுதான் இன்றைக்கு நமது திருக்கூட்டத்திலுள்ள பெரும்பாலானவர்களின் வாழ்க்கை தத்துவம், வாழ்வியல் பேருண்மை.

(3) **எம்மிடத்திலும், எம்மைச் சார்ந்தவர்களிடத்திலும் தன்னலம் இல்லை, சுயநலம் இல்லை, பேராசை இல்லை, வெறியுணர்வு இல்லை, .... மேலும், நாம் அனைவருமே அருளுலகத்தவர்களால் இயக்கப்படுகின்ற அருள், பொதுத் தொண்டு எனும் படகில் அமர்ந்திருக்கிறோம். எனவே, படகுக்குள் பொறுமையிழந்து எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடப்பதால் படகு சீக்கிரம் கரைக்குப் போகாது. அது போய்ச்சேரும் போதுதான் போய்ச்சேரும். இதையெண்ணி, கரை போய்ச் சேர்ந்த பிறகு என்னென்ன செய்ய வேண்டும்? என்பதை படகுப் பயணத்திலேயே நன்கு சிந்தித்து, முடிவான செயல்திட்டங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதுபோல, நாம் நமது வெற்றிக்குப் பிறகு என்னென்ன செய்ய வேண்டும்? என்பதை இப்பொழுதிலிருந்தே நிறைவாகவும், விரைவாகவும், முறையாகவும் சிந்தித்து முடிவுகட்டி ஈட்டங்களை உருவாக்கியாக வேண்டும். ஏனெனில், நாம் அருளாளர்கள். நாம் வெற்றி பெறுவது உறுதி. தற்காலிகமான எதிர்ப்புக்களையும், எதிரிகளையும், நம்மைப் புறக்கணிப்பவர்களையும் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.**

(4) அன்பு மகனே! உன்னைப் போலத்தான் எமக்குக் கிடைத்திருக்கின்ற நம்மவர்கள் அனைவருமே மிகப் பெரிய தியாகங்களை செய்து வருகிறார்கள். வீரதீரத்தோடு, தன்னம்பிக்கை குன்றாமல் செயல்படுகிறார்கள். எல்லோருமே, தங்களது குடும்பத்தை எதற்கும் எதிர்பார்க்காமல், தனித்துச் செயல்படும் பக்குவத்தைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, நாம் அனைவருமே ஒரு மிகப் பெரிய பண்பாட்டுப் புரட்சிக்குத் தயாராகி கொண்டிருக்கிறோம். அதற்குரிய மனப் புரட்சி, சிந்தைப் புரட்சி, எண்ணப் புரட்சி, கருத்துப் புரட்சி, ..... முதலிய புரட்சிகள் நம்மால் அன்றாட வாழ்வில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இதுதான் சத்தியமான உண்மை! உண்மையான சத்தியம்! நமது சத்திய உண்மையின் தூய்மையால், வாய்மையால், திண்மையால், ஒண்மையால், மேன்மைக்குரிய பாண்மையால் ..... வெற்றி பெறும்.

(5) அன்பு மகனே! நாம் ஒருவருக்கொருவர் அடிக்கடி அஞ்சல் தொடர்பு கொண்டு, செய்திகளைப் பரிமாறிக் கொண்டு செயல் திட்டங்களை வகுத்துச் செயல்பட்டால்தான் நமது இமாலய முயற்சியில் வெற்றி பெற முடியும்.

(6) நமக்கும், மாற்று மதத்தவர்களுக்கும் இடையில் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. நமக்கு யாரிடமும் மறுப்போ, வெறுப்போ, எதிர்ப்போ, பகையோ, கண்டிப்போ கிடையாது. **'<u>நாம் யார்க்கும் எதிரி அல்ல! நமக்கு யாரும் எதிரி அல்ல!</u>'** இதுதான் நமது நிலை. இதை நாம் நன்கு புரிந்து கொண்டு; பிறருக்கும் புரிய வைத்துச் செயல்பட்டிட்டால்தான், நமது வளர்ச்சியே வெற்றியாகிடும். நமக்கு தளர்ச்சியே கிடையாது! தளர்ச்சியோ, வீழ்ச்சியோ வரவே வராது.

(7) இன்றைக்கு இந்துக்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் இந்து மதத்தில் பற்றும் நம்பிக்கையும் உடையவர்கள்தான். அதாவது, எல்லோருமே நல்ல மெய்யான, வாய்மையான, தூய்மையான பத்தியாளர்கள்தான். இதில் சந்தேகமேயில்லை. இதேபோல், மீதியுள்ள நூற்றுக்குப் பத்து பேர் கூட போலியான நாத்திகர்களாக, மத மறுப்பாளர்களாக, வெறுப்பாளர்களாக, .... வாழுகிறார்கள். அதாவது, நூற்றுக்குப் பத்து பேர் இந்துமதத்தில் நாத்திகர்களாக, மதமறுப்பாளர்களாக, வெறுப்பாளர்களாக, ... இருப்பது போல் தெரிந்தாலும்; இவர்களின் குடும்பத்தார்கள் மூலம் இவர்கள் ஆத்திகர்களாகத்தான் வாழுகிறார்கள். எனவே, **'நாம் நமது இந்துக்களை; இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி முனை கடலடி மணற்பரப்பு வரையில் வாழுகின்ற பலகோடி இந்துக்களை; உலகெங்கும் பல்வேறு காரணங்களுக்காக பரவலாக வாழுகின்ற <u>இந்துக்களை ... முழுமையாக செயல்வடிவில் இந்துக்களாக வாழச் செய்ய வேண்டும்</u>.'**

(8) ஆனால்! ஆனால்!! ஆனால்!!! ... அன்பு மகனே! "தூங்கிறவர்களை எழுப்பலாம்; ஆனால், தூங்குகிற மாதிரி நடிக்கிறவர்களை எழுப்ப

முடியாது” என்ற மூதுரை போல், பெரும்பாலான இந்துக்கள்; தாங்கள் இந்துக்களாக வாழுவதாக கற்பனை செய்து கொண்டு; கனவு கண்டு கொண்டு போலியான இந்து வாழ்க்கையை வாழுகிறார்கள். இவர்களைத் திருத்துவதுதான் அரிது! அரிது!! அரிது!!! ... சிரமம்! சிரமம்!! சிரமம்!!! ஏனெனில், ‘இன்றைக்கு இந்துமதத்தின் பெயரால் உள்ள அரசியல் கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும், சபைகளும் சரி; சமய சமுதாய கலை இலக்கியக் கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும், சபைகளும் சரி .... பெரும்பாலும் இந்துமதத்தைத் தெரியாதவர்களாக, அறியாதவர்களாக, புரியாதவர்களாக, முழுமையாக நம்பாதவர்களாக, ஆழமான பிடிப்போ, பற்றோ, ஈடுபாடோ இல்லாதவர்களாக ... இருப்பவர்களால்தான் நடத்தப்படுகிறன! நடத்தப்படுகிறன!! நடத்தப்படுகிறன!!! நடத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றன! இதுதான் உண்மை!’

(9) இந்த உண்மையினால்தான்; அந்நிய ஆட்சிகள் முடிவு கட்டப்பட்டு, இந்தியநாடு விடுதலை பெற்றும் கூட, இந்தியாவிலுள்ள இந்துக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்களுக்கு, தாங்கள் ஓர் இந்து என்ற உணர்வு ஏற்படவில்லை! ஏற்படவில்லை!! ஏற்படவில்லை!! ஏற்படவே இல்லை! ஏற்படுத்தப்பட முடியவில்லை! ஏற்படுத்தப்பட முடியவில்லை!! ஏற்படுத்தப்பட முடியவில்லை!!! ஏற்படுத்தப்படவே முடியவில்லை!

(10) இந்த அவலநிலை, கேவலநிலை, பழிநிலை, இழிநிலை, அழிநிலை, ஒழிநிலை, ... இன்னும் எத்தனை காலம் தொடர்ந்திடுமோ தெரியவில்லை. இதை எண்ணித்தான், யாம் மிகுந்த எச்சரிக்கையோடு, நிதானத்தோடு, பொறுமையோடு எதிலுமே பட்டுக் கொள்ளாமல் எமது சொல்லையும், செயலையும் ஒரே சீராக, எதிலுமே பட்டும்படாமலும், எதையுமே தொட்டும் தொடாமலும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம்.... இதை பலர் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

(11) அன்பு மகனே! ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிறுபிள்ளைகள், கூர்மையான கத்தியை கையில் வைத்துக் கொண்டு ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தால், அதைத் தடுக்க முற்படும் தாய் தந்தையரின் மனநிலையில்தான் யாம் இருக்கிறோம்.

(12) .... அதாவது, நமது இந்துக்கள் மாநிலங்களின் பெயராலும், வட்டாரங்களின் பெயராலும், மொழிகளின் பெயராலும், இனங்களின் பெயராலும், அகப் பண்பாட்டு வேறுபாடுகளின் பெயராலும், புற நாகரிக வேறுபாடுகளின் பெயராலும் ... ஒருவரோடொருவர் மறைமுகமாகவும், நேரடியாகவும் போட்டி பொறாமைகளை வளர்த்துக் கொண்டு, ஒருவருக்கு மற்றவர் சவால் விட்டுக் கொண்டு, ஒருவர் மற்றொருவரைப் பார்த்து உறுமிக் கொண்டு, ஒருவர் மற்றொருவருக்கெதிராக சூழ்ச்சிகளை செய்து கொண்டு, ஓய்வு ஒழிவின்றி (சதா சர்வகாலமும்), தொடர்ந்து எப்பொழுதும் சண்டை சச்சரவுகளை வளர்த்துப் போரைத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறார்கள்.... ???

(13) இந்த போர்க்கோல நிலைகளை, போர்க்கால நிலைகளை மாற்ற வேண்டும் என்பதுதான் இந்த கலியுகத்தைச் சேர்ந்த எமது முன்னோர்களின் முயற்சியும், இன்றைய எமது முயற்சியும் ஆகும். ஆனால், '<u>இந்துக்களுக்கு எதிரி இந்துக்களே</u>' என்ற நிலை நீடிப்பதால் எங்களது நோக்கும், போக்கும் செயலூக்கமும், செயலாக்கமும் பெற முடியாமல் இருந்து வருகின்றன. எனவேதான், யாம் 36 ஆண்டுக்காலம் கற்று, நோற்று, உற்றுப் பெற்றவைகளையெல்லாம் பொதுமக்களுக்கு உணர்த்தும் வண்ணம் எளிமைப்படுத்தி; சிறிய, பெரிய புத்தகங்களாக எழுதிக் கொண்டு வருகிறோம். இப்படி, யாம் வெறும் நூல்களை மட்டும் உருவாக்கிக் கொண்டிருக்காமல், எம்மால் முடிந்தவரை உன்போன்று பல ஆள்களையும் பரவலாக, நாடு முழுவதும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறோம். அந்த செயல்திட்டத்தின் ஓர் அங்கமாகத்தான், இப்போதைய எமது கரூர்

சுற்றுப் பயணத் திட்டம் உருவாகி இருக்கிறது. <u>இதை நீ நன்கு புரிந்து கொள்ள வேண்டும்; இதை நீ முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும்</u>.

(14) அன்பு மகனே! இப்படி யாம் எழுதுவதற்குக் காரணம்:-

அ) எமது நேரம், முயற்சி, உழைப்பு, ... முதலியவைகளெல்லாம் வீணாகி விடக் கூடாது.

ஆ) எமது சொல்லும், செயலும் எக்காரணம் பற்றியும் நமது இந்துக்களைப் புண்படுத்தி விடக் கூடாது. ஏனென்றால், யாம் முழுக்க முழுக்க '**<u>நமது இந்துக்களை, இந்துக்களாக்க முயற்சிக்கிறோம்</u>**'. நமக்கு மாற்று மதத்தவர்களைப் பற்றிய எண்ணம் எதுவுமேயில்லை. எனவேதான், நமது இந்துக்கள் தங்களுடைய இந்துமத நூல்களையும், இந்துமதத்துக்குரிய இந்துவேத நூல்களையும், இந்துவேதத்திற்கு அடிப்படையான மனுநீதி நூல்களையும் ... பற்றி ஓரளவாவது தெரிந்து கொள்ள வேண்டும். பெயரளவிலாவது அவற்றிலுள்ள நூல்களின் பெயர்கள், நூல்களின் பகுப்புக்களின் (பிரிவுகளின்) பெயர்கள், நூல்களிலுள்ள கருத்து, செய்தி, வாக்கு, வாக்கியம், வாசகம், சுருதி, சூலகம், ..... என்ற வடிவமைப்புக்களின் எண்ணிக்கைகளைப் பற்றி கணிசமான அளவு தெரிந்திருக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக, 'ஓர் இந்துவின் அன்றாட வாழ்க்கை நெறிமுறை விதிகள்', 'ஓர் இந்துவின் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, சமய வாழ்வு, அரசியல் வாழ்வு, ... முதலிய வாழ்வுகளுக்குரிய சடங்கியல் விதிகளும், பழக்க வழக்கங்களும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும் என்ன? என்னென்ன?' என்பதை தெரிந்திருக்க வேண்டும். ..... என்ற நேரடி முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் யாம். இதனால், நமது இந்துக்களில் காலத்தின் போக்கில் ஏற்பட்டு விட்ட மடமைகள், மூடநம்பிக்கைகள், கண்மூடிப் பழக்க வழக்கங்கள், ஆபாசக் கற்பனைகள், அந்நியர்களால்

உருவாக்கப்பட்டுவிட்ட ஏமாற்றுகள், சுரண்டல்கள், பிரிவினை சூழ்ச்சிகள், வேற்றுமையை வளர்க்கும் பழக்க வழக்கங்கள், தாழ்ச்சிகளையும் இகழ்ச்சிகளையும் தொடர்ந்து பயிராக்கிடும் சாத்தர, சாத்திர, சாத்திறங்கள் முதலியவைகளையெல்லாம் அகற்றுகின்ற எமது நோக்காலும், போக்காலும் பிறக்கின்ற வாக்குகளால் புண்பட்டு விடக் கூடியவர்கள் மிகுதியாக இருந்திடுவார்கள்! மிகுதியாக இருந்திடுவார்கள்! மிகுதியாக இருந்திடுவார்கள்! அவர்களைச் சமாளிப்பதிலும், சமாதானப் படுத்துவதிலும் எமது நேரம் வீணாகி விடக் கூடாது.

இ) யாம், நமது மதத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் செயல்படுவது போல, அருளாசி வழங்கிவிட்டு போக விரும்பவில்லை. எம் விருப்பமெல்லாம் அருளுரை வழங்குவதுதான். மக்களுக்கு அருளாசி வழங்கிட உன் போல் ஆயிரமாயிரம் சித்தர்களும், மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், சன்னிதானங்களும், ஆதீனங்களும், தம்பிரான்களும், பண்டாரங்களும், பண்டார சந்நதிகளும், பண்டார சந்நிதிகளும், ஆச்சாரியார்களும், ... நான்குவேத கணபாடிகளும் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

(15) எனவே யாம், இந்துமதத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய அறிவோ, அநுபவமோ, கல்வியோ, அக்கரையோ, ஆர்வமோ உடையவர்களை மட்டும் நெருக்கமாக சந்திக்க அதிக வாய்ப்புக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அது போதும்.

(16) அன்பு மகனே! கூடுமானவரை ஆடம்பரமோ, ஆரவாரமோ இல்லாமல் எமது சுற்றுப் பயணம் அமையட்டும். எம்மைச் சந்திக்க விரும்புகிற மக்களை எவ்வித வேறுபாடுமில்லாமல் யாம் சந்திக்க ஏற்பாடுகள் செய். ஆனால், ஒரே நாளில் பல ஏற்பாடுகள் தேவையில்லை. எமக்கு ஓய்வும் தேவை; யாம் தங்கும் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள கோயில்களுக்கும், முக்கியமான தெருக்களுக்கும் எமது வருகையும் தேவை. எனவே, யாம் பொறுமையாக அவசரமின்றி

பத்து (10) நாட்களுக்கும் மேலாகக் கூட இச் சுற்றுப்பயணத்தில் கரூர் வட்டாரத்தில் தங்கிட விரும்புகிறோம்.

(17) இன்றைக்கு இந்துக்களுக்கு இந்துமத அறிவு, இந்துமத வரலாறு, இந்து இலக்கியங்கள், இந்து அருளாளர்களின் போதனைகள், சாதனைகள், ... முதலியவைகள் தெரிந்திருக்க வேண்டும் என்ற எமது நோக்கும், போக்கும் வெற்றி பெறும் வண்ணம் கரூரில் உள்ள பெரியவர்களிடம்; நமது பதினெண்சித்தர் மடம் குருபீடம் பற்றிக் கூறிடுங்கள், விளக்கிடுங்கள்.

(18) அன்பு மகனே! உன்னோடு அவ்வட்டாரத்தைச் சேர்ந்த யாராவது ஓரிருவரை சேர்த்துக் கொள். அப்பொழுதுதான் கரூருக்கு எழுந்தருளப் போகிற பதினெண்சித்தர் மடாதிபதி இம்மண்ணுலகுக்கு இந்துவேதத்தை, இந்துமதத்தை அருளிய ஆதிசிவனாரின் குருபாரம்பரிய வாரிசு, இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, பரபிறம்மம், நிறை யக்ஞர், இந்துவேத இந்துமதத் தலைமை ஆச்சாரிய குருபீடம், ... என்ற பேருண்மைகள் நன்கு தெரிந்திடும்! புரிந்திடும்! தெரிந்திடும்!! புரிந்திடும்!! தெரிந்திடும்!!! புரிந்திடும்!!! அதாவது, இந்துவேத செய்திகளும், கருத்துக்களும், இந்துமத வாழ்வியல்களும், நடைமுறைகளும், மனுநீதி நூல்கள் தரும் சாத்தர, சாத்திர, சாத்திறங்கள், ... முதலியவைகளை தெரிந்த குருபீடம்; அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் என்ற பேருண்மையினை புரிந்து வரவேற்பவர்கள் கரூர் வட்டாரத்தில் நிறைய இருந்திடுவார்கள். இதைத்தான் யாம் எதிர்பார்க்கிறோம். வேறு யாருக்காவது, யாமே நேரடியாக நமது திருமடத்திலிருந்து அஞ்சல்கள் அனுப்ப வேண்டுமென்றால், அவசர அவசியமாக அவர்களின் முகவரிகளை பொன்னேரிக்கும், அம்பத்தூருக்கும், அவைத் தலைவர் பொன்னுசாமிக்கும் (அவைத் தலைவர், 10, டிரஸ்ட்பாக்கம் தெற்கு, மந்தைவெளி, சென்னை - 28) எழுதியனுப்பிடு.

(19) இந்துமதத்தின் பெயராலுள்ள அனைத்து வகையான சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய நிறுவன நிர்வாகங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் ஒரு மாபெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் நாம் என்ற உணர்வோடு, நம்பிக்கையோடு, ... யாம் உனக்கு ஏற்கனவே அனுப்பியிருக்கின்ற 'இந்துக்களுக்கு ஒரு வேண்டுகோள்' என்ற அறிக்கையை பல்லாயிரக்கணக்கில் நீயும், உனது நண்பர்களும், எமது வருகைக்கு ஆதரவு தரக்கூடியவர்களும் சேர்ந்து அச்சிட்டு விரிந்து விரைந்து கரூர் மாநகரிலும், அதன் சுற்றுவட்டாரங்களிலும் வழங்கினால் நல்லது! நல்லது!! நல்லது!!!

(20) அன்பு மகனே! எமது வருகைக்குரிய ஏற்பாடுகளை முழுமையாக செய்வதற்குரிய கால அளவு மிகமிக குறுகியதாக இருக்கின்றது. இருந்த போதிலும், கரூர் வட்டாரத்திலுள்ள மக்களின் திருநாள், திருவிழா நிலைகளை ஏற்று; அவற்றிற்காகவே, யாம் இச் சுற்றுப்பயணத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளோம். எனவே, நீ விரும்புகிறவர்களுக்கு இந்த அஞ்சலைப் படித்துக் காட்டு. தேவையானால் இயந்திர நகல்கள் (xerox copies) தயாரித்து வழங்கிடு. ஏனெனில், யாம், வாடிக்கையாக நமது மதத் தலைவர்கள் வேடிக்கைப் பொருட்களாவது போல் ஆகிவிடக் கூடாது.

(21) அண்மையில்தான், கன்னியாகுமரி மாவட்ட மண்டைக்காடு ஆத்தாள் தேவி பகலவதியின் திருவிழாவில் நடந்த இந்துசமய மாநாட்டில் கலந்து கொண்டதோடு, கன்னியாகுமரி மாவட்டச் சுற்றுப் பயணத்தையும் செய்து வந்தோம். அதனால், நம்மைச் சேர்ந்த அனைவருக்குமே அதிக அளவில் கால செலவு, முயற்சி செலவு, பண செலவு ... முதலியவைகள் ஏற்பட்டுவிட்டன. இப்போது மீண்டும் எமது கரூர் சுற்றுப்பயணம் நிகழ்கிறதென்றால்; அவர்கள் எல்லோருமே பெருந்திரளாக அங்கு வர இயலாது. இருந்த போதிலும், எப்படியும் குறைந்தது 20 முதல் 25 பேர்கள் வரை

எம்மோடு சுற்றுப்பயணம் செய்ய நேரிடலாம். எனவே, ஆங்காங்கே இவர்கள் தங்கவும், இவர்களுக்கு உணவுகள் கிடைக்கவும், இவர்களுக்குரிய போக்குவரத்து வசதிகள் கிடைக்கவும் இப்பொழுதிலிருந்தே கூட்டு முயற்சியாக உரிய செயல்திட்டங்களை உருவாக்கிடு. இத்திட்டங்களை அடிக்கடி சரிபார்த்திடு.

(22) யாம் அதிக நாட்கள் தங்குவதற்குக் காரணமே அடிக்கடி எம்மால் சுற்றுப்பயணம் வர இயலாது. மேலும், இச்சுற்றுப்பயணத்திலேயே கரூர் வட்டாரத்தில் கணிசமானவர்களை உனக்குத் துணையாகச் செயல்படும்படி ஒன்றுதிரட்டிட விரும்புகிறோம் யாம். ஆனால், உன்னால் எத்தனை நாட்கள் எமது சுற்றுப்பயணத்தை சமாளிக்க இயலுமோ அதற்கு மட்டும் ஏற்பாடு செய். ஒரு சில நாட்களுக்குள் யாம் இங்கிருந்து எமது இருப்புப்பாதை வண்டியில் எமது பயணச் சீட்டைப் பதிவு செய்து கொள்ளும் வண்ணம்; அங்கிருந்து எந்தத் தேதியில் புறப்படலாம் என்பதைத் தெரிவித்திடு.

மற்றவை பதில் கண்டு.

**அன்பு**

**சித்தர், தலைவர், குருதேவர், ஞானத்தந்தை,**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்.**

திருவோலை நாயகம்:-

சித்தர் நான்வேதமுடையார்
உலகநாதன் கவிதாதேவி, / 16.4.95

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தர் நான்வேதமுடையார் உலகநாதன் கவிதாதேவி அவர்களின் கையெழுத்தில் இருந்த கையெழுத்துப் பிறதி நகல்.//**

# இருக்குவேதம் தரும் இந்துவின் பத்து கடமைகள்

கட்டுரை அஞ்சல் எண்: 1/11.4.95

பொன்னேரி,
11-4-1995.

அனுப்புநர்:
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை அலுவலகம்,
3, N.G.O.நகர், 'தென்றல்' இல்லம், பொன்னேரி - 601204.

பெறுநர்:
உயர்திரு S. கருணாநிதி,
RM.PL Complex,
பாண்டியன் தியேட்டர் எதிரில், காரைக்குடி - 623002.

கலையார்வம் மிக்க, இந்துமதப் பற்றாளர் கருணாநிதி அவர்களே!

(1) தங்களுடைய தேதி குறிப்பிடப்படாத, தங்களுடைய வயது, பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், பெயர், வயது, சொந்த ஊர், ... முதலிய தெளிவான செய்திகள் ஏதுமின்றி; ஆர்வம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட அஞ்சல் கிடைத்தது.

(2) புதியவர் யார் குருபீடத்திற்கு அஞ்சல் எழுதினாலும் அவர்; அந்தந்த வட்டாரத்திலுள்ள, குருபீடத்திற்கு அறிமுகமான சன்னிதானங்களிடமிருந்து பரிந்துரை கையொப்பமாவது, அஞ்சலாவது பெற்றிடல் வேண்டும்.

(3) இப்படி பல குறைபாடுகள் மிகுந்த சூழ்நிலையில், தங்களது அஞ்சல்; குருபீடத்திற்கு கிடைத்ததால்தான், உடனடியாகத் தங்களுக்கு பதில் எழுதப்படவில்லை.

(4) அன்புகூர்ந்து தாங்கள்; தங்களுடைய ஊரிலுள்ள தாங்கள், தங்களுடைய அஞ்சலில் குறிப்பிட்டுள்ள திரு நெல்லியான், திரு ஐயப்பன், திரு சோலை முதலிய சன்னிதானங்களிடம் இந்தத் திருவோலையைக் காட்டி அவர்களுடைய பரிந்துரையுடன் கூடிய அஞ்சல் ஒன்றினை எழுதுங்கள். அதில் படிவ எண்: 9 (Form No.9) என்பதை வாங்கி; அதில் தேவைப்படுகின்ற செய்திகளையெல்லாம் நிறைவு செய்து, அந்த அஞ்சலோடு சேர்த்தனுப்புங்கள்.

(5) நம்மவர்களுடைய வளர்ச்சி, அரசியல் கட்சிகளின் வளர்ச்சிகளைப் போல் கரையில்லாத, காட்டாறாக மாறிவிடக் கூடாது. நன்கு சட்டதிட்டக் கட்டுப்பாடுகளுடன் உருவாக வேண்டும். அப்பொழுதுதான் சில ஆயிரம் ஆண்டுகளாக வீழ்ச்சியுற்று, தாழ்ச்சியுற்று, இகழ்ச்சியுற்று கிடக்கின்ற இந்து சமுதாயத்தை விடுவிக்க முடியும்.

(6) தங்களைப் போன்ற துடிப்பு மிக்க, உண்மையுள்ள ஆர்வமிகு வீர இளைஞர்கள்; இந்துமதத்தை பாதுகாக்க முன்வந்தே தீர வேண்டும். அதனால், உங்களுடைய இப்பிறவிக்கும், உங்கள் குடும்பத்தவர்களுக்கும் புண்ணியம் கிடைக்கும், வீடுபேறு கிடைக்கும்.

(7) நம் மக்கள், தங்களை 'இந்து' என்று சொல்லிக் கொள்ளவே தெரியாதவர்களாக, புரியாதவர்களாக, விரும்பாதவர்களாக, அப்பாவிகளாக இருக்கின்றார்கள். இதை முதலில் மாற்ற வேண்டும்.

(8) ஓர் இந்துவின் கடமைகள் (அ) திருநீறு குங்குமம் அணிதல், (ஆ) உருத்திராக்கம் அணிதல், (இ) பூணூல் அணிதல், (ஈ) காப்புக்கயிறு அணிதல், (உ) வாரம் ஒருமுறை கோயில் வழிபாடு, (ஊ) அன்றாடம் காயந்திரி மந்திரம் ஓதுதல், (எ) குடும்ப ஆண்டவர்களைக் கும்பிடுதல்,

(ஏ) குலதெய்வங்களை கும்பிடுதல், (ஐ) கிராம தேவர் தேவதைகளை கும்பிடுதல், (ஒ) நாட்டுக் கடவுளர்களைக் கும்பிடுதல் - என்றிப்படி குறிப்பிடப்படக் கூடிய பத்து (10) கடமைகளையும், நமது மக்கள் 'இருக்கு வேதத்தில்' கூறியுள்ளபடி கடைப்பிடித்தேயாக வேண்டும்.

[இருக்கு வேதம்:- காண்டம்: 1, மண்டலம்: 9, நாள் உரைக்கோவை வாசக மலர்: 32]-இல் இக்கருத்து வலியுறுத்தப்படுகிறது. அதாவது,

**"ஒவ்வோர் இந்துவும் தன்னுடைய பிறவிப் பயனை அடைந்திட, வீடுபேறு இன்பம் துய்த்திட, நிறைவாழ்வு வாழ்வதற்கு தனக்குரிய பத்துக் கடமைகளையும் [1. திருநீறு குங்குமம் அணிதல், 2. உருத்திராக்கம் அணிதல், 3. பூணூல் அணிதல், 4. காப்புக்கயிறு அணிதல், 5. வாரம் ஒருமுறை கோயில் வழிபாடு, 6. அன்றாடம் காயந்திரி மந்திரம் ஓதுதல், 7. குடும்ப ஆண்டவர்களைக் கும்பிடுதல், 8. குலதெய்வங்களை கும்பிடுதல், 9. கிராம தேவர் தேவதைகளை கும்பிடுதல், 10. நாட்டுக் கடவுளர்களைக் கும்பிடுதல்] உரிய பூசைமொழிகளைக் கூறி, உரிய பூசைவிதிகளின்படி முறையாகச் செய்திடல் வேண்டும்"**

[***இருக்கு:- காண்: 1, மண்: 9, நா.உ.வா.மலர்: 32***]

என்று கூறப்பட்டிருக்கிறது.

(9) ஆர்வமிக்க வீர இளைஞர் கருணாநிதி அவர்களே! உங்களுக்கு எழுதப்படும் இத்திருவோலையில், இருக்கு வேதத்தின் சிறப்பான வாசகம் ஒன்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே, உங்களுக்கு திருவருளும், குருவருளும் சித்திக்கின்றன. அங்குள்ள சன்னிதானங்களுடன் சேர்ந்து, இணைந்து செயல்பட்டால்; குருதேவரைக் காரைக்குடி வட்டாரத்திற்கு வரவழைத்திட்டால்; தங்களைப் போல், பல புதியவர்களுக்கு அருட்பட்டங்கள் வழங்கி; அருட்பணிகள் ஆற்றிட குருதேவர் அங்கு வருவார்.

மற்றவை உங்களின் பதில் கண்டு.

**அன்பு**
**சித்தர், தலைவர், குருதேவர்.**
**ஞானத்தந்தை,**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்.**

திருவோலை நாயகம்:
சித்தர் நான்வேதமுடையார்,
உலகநாதன் கவிதாதேவி / 11.4.95.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல் சித்தர் நான்வேதமுடையார் உலகநாதன் கவிதாதேவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்துக்களுக்கு ஒரு வேண்டுகோள்

**அருளுபவர்:**
**இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடம்,**
**ஞாலகுரு, அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார்,**
**பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி.**

இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்கள், இருக்கு வேதத்திலும், சாம வேதத்திலும் (காண்டம் - 8, மண்டலம் - 32, நாள் வாசகம் - 43 முதல் 48 முடிய) கூறியுள்ளவாறு இந்துக்கள் வாழ்வதற்காக வழங்கும் "ஓர் இந்துவின் ஆறு கடமைகள்".

1. இந்துக்களாக இருப்பவர்கள் கட்டாயம் ஆண்டுக்கொருமுறை வருடப் பிறப்பு நாளன்று புதிய ஒற்றை உருத்திராக்கம் கழுத்தில் அணிந்து கொள்ள வேண்டும்.

வசதி வாய்ப்பிற்கேற்ப பழைய ஒற்றை உருத்திராக்கத்தை கழற்றி குளத்திலோ, ஆற்றிலோ அல்லது கடலிலோ போட்டுவிட வேண்டும்.

2. இந்துக்களாக இருப்பவர்கள் கட்டாயம் மாதமொருமுறை அமாவாசை நாளிலோ அல்லது முழுநிலவு (பௌர்ணமி) நாளிலோ புதிய பூணூல் அணிந்து கொள்ள வேண்டும்.

வசதி வாய்ப்பிற்கேற்ப பழைய பூணூலை கழற்றி, குளத்திலோ, ஆற்றிலோ அல்லது கடலிலோ போட்டுவிட வேண்டும்.

3. இந்துக்களாக இருப்பவர்கள் கட்டாயம் மாதமிருமுறை அமாவாசை நாளிலும், முழுநிலவு நாளிலும் புதிய "காப்பு கங்கணக்

கயிறு" கட்டிக்கொள்ள வேண்டும். (ஆண்கள் வலது மணிக்கட்டிலும், பெண்கள் இடது மணிக்கட்டிலும்).

வசதி வாய்ப்பிற்கேற்ப பழைய காப்புக் கங்கணக் கயிறை கழற்றி குளத்திலோ, ஆற்றிலோ அல்லது கடலிலோ போட்டுவிட வேண்டும்.

4. இந்துக்களாக இருப்பவர்கள் கட்டாயம், வாரமொருமுறையாவது அவரவர் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப ஏதாவது ஒரு கோயிலுக்குச் சென்று, அருட்சினை செய்து பூசை செய்து வர வேண்டும்.

5. இந்துக்களாக இருப்பவர்கள் அன்றாடம் காலை மாலை உடலைச் சுத்தம் செய்து கொண்டு; திருநீறு, குங்குமம், மஞ்சள், சந்தனம், சாந்து, திருமண், .... முதலியவற்றில் தங்களுக்கு விருப்பமானதை அணிந்து கொள்ள வேண்டும்.

6. ஒவ்வொரு இந்துவின் குடும்பத்திலும், அக்குடும்பத்திலுள்ள யாராவது ஒருவர், அன்றாடம் மாலையில் பூசைக்குரிய இடத்தில் விளக்கேற்றி, காயந்திரி மந்தரத்தை 48 முதல் 108 முறைகள் வரை ஓத வேண்டும்.

இந்த ஆறு கடமைகளை இந்துக்கள் தவறாது நிறைவேற்றுவதின் மூலம்தான்:-

(1) இந்துக்கள் தங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அனைத்து வகையான பாதிப்புக்களையும் அகற்றிக் கொள்ள முடியும்.

(2) இந்துக் கோயில்கள் அனைத்தையும் முழுமையாக இந்துக்களுக்குப் பயன்படும்படி செய்திட முடியும்.

(3) இந்துக்கள் மாற்றுமதக் கோயில்களுக்கும், மாற்று மதத்தவர்களிடமும் சென்று மந்திரித்துக் கொள்வதையும்; முடிகயிறு, குளிசம், சக்கரம் பெற்றுக் கொள்வதையும் மாற்ற முடியும்.

இதைத்தான் பதினெண்சித்தர் மடம், தமது திருமடத்தைச் சேர்ந்த சித்தர்கள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள் .... முதலிய நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்கள் மூலம் நாடெங்கும் செயலாக்கி வருகிறது.

“இந்துக்களை, இந்துக்களாக மாற்றிட”;

“இந்துக்களை, இந்துக்களாக வாழச் செய்திட”;

“இந்துக்களை, இந்துவேத வாழ்வியல் வழிகளைப் புரிந்து கொள்ளும்படிச் செய்திட”;

இந்துமதத்தின் பெயராலுள்ள ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., பி.ஜே.பி., சிவசேனா, இந்து முன்னணி, .... முதலிய கட்சிகளும், இந்துமதத்திற்காக உள்ள சேவா சங்கங்களும், கூட்டு வழிபாட்டு மன்றங்களும், பசனைக் குழுவினர்களும், அருள்நெறி திருக்கூட்டத்தார்களும்; பதினெண்சித்தர் மடாதிபதியின் அருட்பணித் திட்டங்களுக்கு ஆதரவு தர முன்வர வேண்டும். அப்பொழுதுதான், இந்துக்களின் உரிமைகளும், பெருமைகளும், கோயில்களும் பாதுகாக்கப்பட்டிட முடியும்.

மேற்குறித்த இந்துமதக் கட்சிகள், சங்கங்கள், ..... முதலிய அமைப்புக்களில் உள்ளவர்கள், தங்கள் அமைப்புக்களில் இருந்து கொண்டே, தங்கள் தலைமையின் கீழ் செயல்பட்டுக் கொண்டே, பதினெண்சித்தர் மடாதிபதியின்

**“இந்துவேத வளர்ச்சிப் பணிக்கு”,**

**“இந்துக்களை இந்துக்களாக வாழச் செய்யும் பணிக்கு”,**

**“இந்துக்களை ஒற்றுமைப்படுத்தும் பணிக்கு”,**

**தொண்டாற்றலாம்! தொண்டாற்றலாம்!! தொண்டாற்றலாம்!!!**

இதற்கு, தாராள மனதுடன் எவ்விதமான கட்சி வேறுபாடும் இன்றி, எல்லா இந்துக்களும் ஆர்வத்தோடு ஆதரவு தர வேண்டுகிறோம்.

**பதினெண்சித்தர் மடம்**
**இந்துவேத முன்னேற்றக் கழகம்.**
**வரதராசபுரம்,**
**அம்பத்தூர், சென்னை - 53.**

**இந்துவேதம் வளர்ப்போம்!**
**இந்துமதம் காப்போம்!!**
**அருளாட்சி அமைப்போம்!!!**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**//உண்மை நகல்//**
**// இதன் மூலநகல் தட்டச்சு செய்து சைக்ளோசுடைல் (cyclostyle) செய்யப்பட்ட நகலாகக் கிடைத்தது. //**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"... இன்றைக்கு இந்துமதத்தின் பெயராலுள்ள அரசியல் கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும், சபைகளும் சரி; சமய சமுதாய கலை இலக்கியக் கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும், சபைகளும் சரி .... பெரும்பாலும் இந்துமதத்தைத் தெரியாதவர்களாக, அறியாதவர்களாக, புரியாதவர்களாக, முழுமையாக நம்பாதவர்களாக, ஆழமான பிடிப்போ, பற்றோ, ஈடுபாடோ இல்லாதவர்களாக ... இருப்பவர்களால்தான் நடத்தப்படுகிறன! நடத்தப்படுகிறன!! நடத்தப்படுகிறன!!! நடத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றன!
இதுதான் உண்மை! ..."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ15/-